# அப்போஸ்தலருடைய நடபடிகளில் பரிசுத்த ஆவியானவர்

## தெய்வீக வல்லமையின் மூன்று வெளிப்பாடுகள்

*பிதாவோடும், குமாரனோடும் தேவத்துவத்தில் பரிசுத்த ஆவியானவரும் ஒருவராயிருக்கிறார் (கொலோ. 2:9). அவர் தெய்வீகமான, ஆவிக்குரிய நபர்த்துவத்தைக் கொண்டிருக்கின்றார். அவர், "அது" என்றோ அல்லது "வல்லமையின் ஒரு வெளிப்பாடு" என்பதாக மட்டுமோ இருப்பதில்லை.*

*பரிசுத்த ஆவியானவரின் கிரியையானது வேதாகமம் முழுவதிலும் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் "மூன்று நபர்த்துவம்" என்ற உபதேசமானது புதிய ஏற்பாட்டில் இருப்பதைப் போன்று அவ்வளவு தெளிவாகப் பழைய ஏற்பாட்டில் விளக்கப்பட்டிருக்கவில்லை. இந்தச் சுருக்கமான பாடத்தில் நாம், புதிய ஏற்பாட்டில் பல்வேறு தனிநபர்கள்மேல் பரிசுத்த ஆவியானவர் எவ்விதம் தமது வல்லமையைப் பொழிந்தார் என்பதைக் கவனிக்க விரும்புகின்றோம்.*

*இயேசுவானவர் ஒரு கன்னியிடமிருந்து பிறந்த நிகழ்ச்சியில் அவருக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இருந்த உறவு பற்றிப் படிப்பதில் (மத். 1:20), அவரது ஞானஸ்நானத்தில் (மத். 3:16), அவர் சோதிக்கப்பட்டதில் (மத். 4:1), அவரது சொந்த ஊழியத்தில் (லூக். 4:14; மத். 12:28), அவரது மரணத்தில் (எபி. 9:14) மற்றும் இன்ன பிற நிகழ்ச்சிகளில் இயேசுவுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இருந்த உறவு பற்றிப் படிப்பதில் நாம் அதிகமான நேரத்தைச் செலவிட முடியும். இயேசு எல்லையற்ற வல்லமையுடன் இருந்தார், அவர் தமது இந்த வல்லமையில் சிலவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டார் (மத். 10:1). ஆயினும், இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்*

குப் பிறகு - கிறிஸ்துவின் யுகத்தில் - பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகளைப் பற்றியே நாம் முக்கியமாய்க் கவனிக்கப் போகின்றோம்.

இயேசு இங்கிருந்து போகும்போது, பரிசுத்த ஆவியான வரை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார் (யோவா. 14:16, 17, 26; இ.வ. 15:26; 16:13). இயேசுவின் வல்லமை எல்லை யற்றது மற்றும் மனிதர்களின் வல்லமை எப்பொழுதுமே வரையரைக்குட்பட்டதாகவே இருந்திருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டு, அவருடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்தை ஆய்வு செய்ய விரும்புகின்றோம்.

## மூன்று வெளிப்பாடுகள்

### பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவியானவரின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் குறித்து நாம் பின்வரும் நான்கு கேள்விகளைக் கேட்க விரும்புகின்றோம்: "யார்?"; "எவ்விதம்?"; "என்ன?" மற்றும் "ஏன்?"

(1) இந்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டது *யார்?* பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் முதலாவதாக இயேசுவின் *அப்போஸ்தலர்கள்* மேல் வந்தது. யோவான் ஸ்நானன் இந்த நிகழ்ச்சியை முன்னுரைத்தார் (மத். 3:11, 12). யோவானின் கூற்றைத் தொடர்ந்து, இயேசுவும் வாக்குத் தத்தங்கள் செய்திருந்தார் (லூக். 24:46-49; அப். 1:4, 5, 8அ). அப். 2ல் பரிசுத்த ஆவியானவர் (2:1-4) அப்போஸ்தலர்கள் மீது இறங்கினார் (1:26-2:1), இது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்ற மாயிருந்தது (2:16, 17அ). இது தீர்க்கதரிசனத்தின் ஆரம்ப நிறைவேற்றமாகும், ஆனால் அப். 2ல் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை *யூதர்கள்* மட்டுமே பெற்றனர். பின்னாளில், *புறஜாதியாரின்* பிரதிநிதிகள் என்ற வகையில் கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார் (10:44-48). இது அப். 2ல் நடந்தது போன்றதாகும் என்பதையே பேதுரு வலியுறுத்தினார் (11:15-17).

(2) இந்த வெளிப்பாடு *எவ்விதம்* கொடுக்கப்பட்டது? இது *தேவனிடத்திலிருந்து நேரடியாக வந்தது.*

(3) இந்த வெளிப்பாட்டில் *என்ன* இருந்தது? அப்போஸ் தலர்களுக்கு *அற்புத வல்லமை* கொடுக்கப்பட்டது. மனிதர்

*களுக்குக் கொடுக்கப்பட்டவைகளிலேயே இதுதான் அற்புத வல்லமையின் மிக விரிவான வெளிப்பாடு ஆகும். (கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் ஆகியோருக்கும் பற்பல பாஷை களைப் பேசும் அற்புத வரம் அருளப்பட்டது, ஆனால் கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் மேல் பரிசுத்த ஆவியானவர் பொழியப்பட்டது பற்றிய மற்ற எந்தத் தகவலும் நமக்கில்லை.)*

*(4) இந்த வெளிப்பாடு ஏன் கொடுக்கப்பட்டது? பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமானது அதைப் பெற்றவர்களை இரட்சிக்கவில்லை (அப். 11:14, 15) அல்லது, அது அவர்களைப் பாவமற்றவர்களாக்கவில்லை (கலா. 2:11-14). எல்லா அற்புத வெளிப்பாடுகளுக்கும் போலவே, பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்திற்கும் கூட, ஏவப்பட்ட பிரசங்கியார்களின் பிரசங்கத்திற்கும் நம்பகத் தன்மை கொடுக்கும் வல்லமை இருந்தது (மாற். 16:20; எபி. 2:4). பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் இன்னொரு நோக்கத்திற்கும் பயன்பட்டது: அது செயல்படத் தொடங்குமாறு சைகை காட்டியது. அப். 2ல் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமானது அப்போஸ்தலர் கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கும்படி சைகை காட்டியது (லூக். 24:46-49); அப். 10 மற்றும் 11ல், அது புறஜாதியாருக்குப் பிரசங்கிக்கத் தொடங்கும்படி சைகை காட்டியது. (மேலும் அதைப் பெற்றவர்கள் தேவனுடைய விருப்பத்தின்படி செயல்பட அது அவர்களைத் தகுதிப்படுத் தியது.) புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் இது தினந்தோறும் நடந்த நிகழ்ச்சியாயிருக்க வில்லை (11:15); இரண்டே இரண்டு நிகழ்ச்சிகளே பதிவாகியுள்ளன.*

## "கைகளை வைக்கும்" வெளிப்பாடு

*"கைகளை வைக்கும்" வெளிப்பாடு என்பது பரிசுத்த ஆவி யானவரின் ஞானஸ்நானத்திலிருந்து மாறுபட்டதாகும். பரி சுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் மனிதரால் அல்ல, தேவனி டத்திலிருந்தே நேரடியாக வந்ததாகும், இதுவோ, அப்போஸ் தலர்களின் கைகள் வைக்கப்பட்டதால் பெறப்பட்டது.*

*சபையின் தொடக்க நாட்களில், அப்போஸ்தலர்கள் மட்டுமே அற்புதங்களை நிகழ்த்தியதாகக் கூறப்பட்டுள்ளது (2:43; 3:4-8; 5:12). ஆயினும், பின்னாட்களில், விசேஷித்த*

பணிகளுக்காக மனிதர்கள் தேர்ந்து கொள்ளப்பட்டு, அவர்கள் மேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்தார்கள். அந்த மனிதர்கள் அற்புதங்களைச் செய்ய முடிந்தது (6:6, 8; 8:6; இ.வ. 19:6), ஆனால் இந்த வரத்தை மற்றவர்கள் மீது கைகளை வைத்துக் கொடுக்க அவர்களால் முடியாதிருந்தது (8:14-17).

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமானது அப்போஸ்தலர்களுக்குப் பல வகையான வரங்களைக் கொடுத்திருக்க, அப்போஸ்தலர்களின் கைகள் தங்கள் மேல் வைக்கப்பட்டவர்கள் தாங்கள் பெற்றிருந்த வரங்களில் அதிகம் வரையறைக்குட்பட்டேயிருந்தார்கள் (இ.வ. 1 கொரி. 12:8-10).

(1) இந்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டது யார்? சில கிறிஸ்தவர்கள் - அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து ஜெபித்தவர்கள் மட்டுமே.

(2) இந்த வெளிப்பாடு எவ்விதம் கொடுக்கப்பட்டது? அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததின் மூலம்.

(3) இந்த வெளிப்பாட்டில் என்ன இருந்தது? இந்த வெளிப்பாட்டிலும் அற்புத வல்லமை இருந்தது, ஆனால் அது வரையறைக்குட்பட்டதாய் இருந்தது.

(4) அற்புதங்கள் நிகழ்த்தும் இந்த விசேஷித்த வல்லமை ஏன் கொடுக்கப்பட்டது? இது, புதிய ஏற்பாடு முழுமையடையும் வரையிலும், "இடைவெளியை நிரப்புவதற்காக"க் கொடுக்கப் பட்டது. நாம் அறிந்துள்ளபடி, புதிய ஏற்பாடு அப்போது இருக்கவில்லை. புதிய ஏற்பாட்டின் எந்த ஒரு புத்தகமும் சபை நிலைநாட்டிய பின் இருபது வருடங்கள் கழித்துத்தான் எழுதத் தொடங்கப்பட்டது, புதிய ஏற்பாடு முழுவதும் எழுதி முடிக்க அறுபதுக்கும் மேற்பட்ட வருடங்கள் ஆயிற்று. அப்போஸ் தலர்கள் நினைத்தவுடன் நினைத்த இடத்தில் சென்று, ஏவுதலுடன் உபதேசிக்க முடியவில்லை. அப்போஸ்தலர்கள் இல்லாதிருக்கையில், மற்றவர்களுக்கு விசேஷித்த வரங்கள் இருப்பது தேவையாயிற்று. இவைகளில் சில வரங்கள் அவர்களுக்குத் தேவனுடைய போதனையைக் கொடுத்தன; மற்ற வரங்கள் அவர்களின் போதனைக்கு நம்பகத்தன்மையைக் கொடுத்தன (எபி. 2:3, 4). இந்நாட்களில் சபைக்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இருக்கின்ற அதே வகையான உறவு முறையே, அந்நாட்களில் சபைக்கும், இந்த வரங்களுக்கும் இடையில் இருந்தது.

**பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுதல்**

முன்பு குறிப்பிடப்பட்ட இரண்டு வெளிப்பாடுகளுக்கும், ஆவியானவர் வந்து வாசம் பண்ணுவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றிச் சற்று விரைவான ஒரு ஆய்வை நாம் மேற்கொள்வோம்:

(1) இந்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டது *யார்?* இது எல்லாக் கிறிஸ்தவர்களுக்குமானது (2:38; 5:32).

(2) இந்த வெளிப்பாடு *எவ்விதம்* கொடுக்கப்பட்டது? கிறிஸ்தவர்கள் தண்ணீரில் (முழுக்கப்பட்டு) ஞானஸ்நானம் பெறுகையில் இது கொடுக்கப்பட்டது (2:38).

(3) இந்த வெளிப்பாட்டில் *என்ன* இருந்தது? மற்ற இரண்டைப் போல இது ஒரு *அற்புதத்தின்* வெளிப்பாடல்ல, ஆனால் தேவனுடைய *அருளிரக்கத்தின்* ஏற்பாட்டினுடைய ஒரு பாகமாக இருக்கின்றது (ரோமர் 8:28 ஐக் காணவும்).

(4) இந்த வெளிப்பாடு *ஏன்* கொடுக்கப்பட்டது? இது மக்களைக் கிறிஸ்தவர்களாக்குவதற்காகக் கொடுக்கப்பட வில்லை, ஆனால் அவர்கள் *கிறிஸ்தவர்களாயிருந்ததினால்* கொடுக்கப்பட்டது (கலா. 4:6). இது கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்தவும், அவர்களுக்கு உதவவும் கொடுக்கப்பட்டது (ரோமர் 8:2, 11, 13, 15, 16, 26, 27).

## இன்றைய நாட்களில் இந்த வெளிப்பாடுகளைப் பற்றிய நிலை என்ன?

இந்த வெளிப்பாடுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் கேட்க வேண்டிய இறுதியான கேள்வி ஒன்று இருக்கின்றது: *எவ்வளவு காலம்?* இந்த வெளிப்பாடுகள் குறிப்பாக எப்போது முடிவுக்கு வரவேண்டும்?

முதல் இரண்டு வெளிப்பாடுகளும் *தற்காலிகமானவை* அவை ஒழிந்து போயின. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானம் அப்போஸ்தலர்களின் வாழ்நாள் முழுவதற்குமான தாயிருந்தது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் ஒரு வாக்குத்தத்தம்தானே தவிர, அது ஒரு கட்டளையல்ல என்பதை நினைவில் வையுங்கள். இது ஒரு குறிப்பிட்ட சில தனிநபர் களுக்குத்தானே தவிர, எல்லா மனிதர்களுக்குமானதல்ல. அதன்

*நோக்கம் நிறைவேறியது, அவை ஒழிந்து போயின. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் கடைசி முறையாய்ப் பெறப்பட்டதாய்ப் பதிவாகியிருந்த காலத்திலிருந்து இருபது அல்லது அதற்கும் மேலான ஆண்டுகளுக்குப் பிறகு, பவுல் ஒரே ஞானஸ்நானமே இருப்பதாகக் கூறினார் (எபே. 4:5). கிறிஸ்துவின் மறுவருகை வரையிலும் தண்ணீர் ஞானஸ் நானமே (8:36-39; 10:47, 48) நடைமுறைப்படுத்த வேண்டியதா யிருக்கின்றதால் (மத். 28:19, 20), பவுல் குறிப்பிட்ட ஒரே ஞானஸ்நானமும் தண்ணீர் ஞானஸ்நானமாகவே இருக்க வேண்டும். இன்றைய நாட்களில் எவரொருவரும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெறுவதில்லை; அப்போஸ் தலர்கள் செய்தது போல இன்றைக்கு எவரொருவரும் அற்புதங் கள் செய்ய முடியாது.*

*மறுபடியும், "கைகளை வைத்தல்" என்ற வெளிப்பாடும் கூட, அதைப் பெற்றுக் கொண்டவர்களின் ஆயுட் காலம் வரைக்கும் இருந்தது. கடைசி அப்போஸ்தலர் மரித்தபோது, இவ்விதமாக வல்லமை பொழியப்படுவது நின்று போயிற்று. அற்புதவரங்கள் தற்காலிகமானவைகள் என்பதைப் புதிய ஏற்பாடு வலியுறுத்துகின்றது (1 கொரி. 13:8-10; யாக். 1:25). இதற்கு மாறாக, தேவனுடைய வசனம் நிலைத்திருக்கின்றது (1 பேது. 1:24, 25).*

*மூன்றாவது வெளிப்பாடாகிய பரிசுத்த ஆவியானவர் வந்து வாசம் பண்ணுதலைப் பற்றி நாம் என்ன முடிவு செய்ய வேண்டியதாயிருக்கிறது? இது கிறிஸ்துவின் யுகம் முழுமைக்கு மானது; இது இன்றைக்கானது. வேதவசனத்தின்படியாக ஞானஸ்நானம் பெறுகின்ற (2:38) ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவரின் இவ்வரம் கொடுக்கப்படுகின்றது - கிறிஸ்துவின் யுகத்தின் முடிவு வரையிலும் தண்ணீர் ஞானஸ்நானத்தை அமல் படுத்த வேண்டியதாய் உள்ளது (மத். 28:19, 20). இவ்விதமாக, இந்த வரமானது கிறிஸ்துவின் யுகத்தின் முடிவு வரையிலும் தொடர வேண்டியதாய் இருக்கின்றது.*

## முடிவுரை

*இந்த மூன்று வெளிப்பாடுகளையும் நமது சிந்தையில் வைத்திருந்தால், அப். நட. புத்தகத்தை நாம் படிக்கையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை பற்றிய அநேக கேள்வி களுக்குப் பதில் கிடைக்கும்.*

# பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கின்றார்?

*அப்போஸ்தலருடைய நடபடிகளில் பரிசுத்த ஆவியான வரின் செயல்பாடுகள் பற்றிய நமது பாடத்தில், பரிசுத்த ஆவியானவர் செய்திருக்கிறவைகள் என்ன என்பதைத் தாண்டி, அவர் என்ன செய்ய அல்லது செய்வதற்கு முடியும் என்பதைத் தாண்டி, அவர் இன்று என்ன செய்கின்றார்? என்பவைகளை நாம் இப்போது காணவிருக்கின்றோம். இந்தக் ''பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கின்றார்?'' என்ற இந்த கேள்விக்குப் பதில் அளிப்பதற்கு தேவனுடைய வசனமே நமக்குத் தகவல் மூலமாய் இருக்கும். மனிதர்களின் சாட்சி நம்பத் தக்கதல்ல என்பது தெளிவு. பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தை ஏவியுள்ளதால் (2 பேது. 1:21; யோவா. 16:13; 1 கொரி. 7:40; எபே. 3:5; வெளி. 2:7), வேதவசனங்களில் பரிசுத்த ஆவியான வரின் செயல்பாடுகள் பற்றிய அவரது சொந்த சாட்சியம் அடங்கியுள்ளது.*

*புறம்பேயுள்ள பாவிக்கும், கிறிஸ்தவருக்கும் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கின்றார் என்பதைக் கவனிக்க நாம் விரும்புகின்றோம்.*

## புறம்பேயுள்ள பாவிக்குப் பரிசுத்த ஆவியானவர் செய்வதென்ன?

*மக்களிடத்தில் மதிப்புப் பெற்ற ஒரு உபதேசமானது, புறம்பேயுள்ள பாவி தேவனுடைய இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள முடிவதற்கு முன் அந்தப் பாவியின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் நேரடியாகக் கிரியை செய்ய வேண்டும் என்று கூறுகின்றது. பாவ நிலையில் பிறந்த ஒருவர் பரிசுத்த ஆவியானவரின் நேரடிக்கிரியையின்றி தேவனுடைய அன்புக்குப் பதில் செய்ய முடியாததால் இது அவசியம் (பரிசுத்த ஆவியானவரின் இந்த நேரடிக் கிரியையானது தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் மேல் மட்டுமே செயல்படுகின்றது) என்று ஜான் கால்வின் போதித்தார். இருப்பினும், மக்கள் பாவ*

*நிலையில் பிறக்கின்றார்கள் என்று வேதாகமம் போதிப்ப தில்லை (மத். 18:3). தேவனுடைய அன்பின் தொடக்கத்திற்கு எல்லாரும் பதில் செய்ய முடியும் (மத். 11:28-30).*

*புரொட்டஸ்டான்டு உலகத்தில் பெரும்பான்மையோர், கால்வினின் முன் குறித்தல் மற்றும் முற்றிலும் பாவநிலை என்ற உபதேசங்களைப் புறக்கணித்து விட்டார்கள், ஆனாலும் அவர்களில் பலர் அவரின் மற்ற உபதேசங்களைத் தக்க வைத்துக் கொண்டார்கள். அவைகளில் இருந்து - புறம்பேயுள்ள பாவியின் மேல் பரிசுத்த ஆவியானவர் நேரடிக் கிரியை செய்தல் போன்ற - மற்ற உபதேசங்கள் வளர்ந்தன. வேதவசனங்களைக் கவனமாகப் படிக்கையில், புறம்பேயுள்ள பாவியினிடத்தில் பரிசுத்த ஆவியானவர் மறைமுகமாய்க் கிரியை செய்வதும், ஏவப்பட்ட வசனத்தினால் அவருக்கு (பாவிக்கு) பாவத்தை உணர்த்துவதும் வெளிப்படுத்தப்படுகின்றன. இயேசு தமது அப்போஸ்தலர்களிடத்தில், தாம் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அனுப்பும்போது, அந்த ஆவியானவர் அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தி, மனுஷர்களுக்குப் பாவத்தை உணர்த்துவார் (யோவா. 16:7-14) என்று கூறினார். பெந்தெகொஸ்தே நாள் அன்று பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கினார். அவர் - ஏவுதலினால் பேசிய பேதுருவின் பிரசங்கத்தின் மூலம் - மனிதர்களுக்குப் பாவத்தை உணர்த்தி னார் (அப். 2:37). அப். நட. புத்தகம் முழுவதிலும் இதுவே முன்மாதிரியாகக் காணப்படுகின்றது.*

*தேவனுடைய வசனமானது “ஆவியின் பட்டயம்” என்று அழைக்கப்படுகின்றது (எபே. 6:17; எபி. 4:12). பட்டயம் என்பது ஆவியானவரல்ல, ஆனால் அது ஆவியானவரால் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். பெந்தெகொஸ்தே நாளில் இருந்து அந்தப் பட்டயமானது மக்களின் இருதயங் களைக் குத்திக் கொண்டிருக்கின்றது (அப். 2:37; மற்றும் 24:25; ரோமர் 3:20; 7:7 ஆகியவற்றையும் காணவும்).*

*தேவனுடைய பட்டயத்தினுடைய வல்லமையை ஒரு போதும் குறைவாக மதிப்பிட்டு விடாதீர்கள்! சத்தியம் நம்மை விடுதலையாக்குகின்றது (யோவா. 8:32; 17:17). நாம் வசனத்தினாலே பரிசுத்தமாக்கப்படுகின்றோம் (யோவா. 17:17). நாம் வசனத்தினாலே சுத்தமாக்கப்படுகின்றோம் (யோவா. 15:3).சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவ*

*பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16). விசுவாசம் வசனத்தின் மூலமாக வருகின்றது (ரோமர் 10:17). வசனமானது நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்குகின்றது (2 தீமோ. 3:14, 15). வசனமானது நமது ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாய் இருக்கின்றது (யாக். 1:21). சத்தியத்திற்குக் கீழ்ப்படியும் செயலில் நமது ஆத்துமாக்கள் சுத்தமாக்கப் படுகின்றன (1 பேது. 1:22, 23; கொலோ. 1:6).*

*அப். நட. புத்தகத்தில் மனமாற்றத்திற்கான எடுத்துக்காட்டு களைப் பற்றி நாம் தொடர்ந்து படிக்கையில், புறம்பேயுள்ள பாவியின்மேல் பரிசுத்த ஆவியானவர் நேரடியாகக் கிரியை செய்வதை நாம் ஒருக்காலும் காண்பதில்லை, ஆனாலும் அவர் எப்பொழுதுமே மறைமுகமாகவே - வசனத்தின் மூலமாகவே - கிரியை செய்வதைக் காண்கின்றோம் (அப். 8:29-39).*

*பரிசுத்த ஆவியானவர் நேரடியாகக் கிரியை செய்கின்றார் என்ற உபதேசமானது (1) தேவனைப் பட்சபாதமுள்ளவராக்கு கின்றது (அப். 10:34, 35; 2 பேது. 3:9), (2) பாவியின் பகுதியில் உள்ள பொறுப்பைக் குறைத்து (அல்லது முற்றிலுமாக நீக்கிக் கூட) விடுகின்றது (மத். 16:24ஐக் கவனிக்கவும்), மற்றும் அது ஆத்தும ஆதாயம் செய்பவர்களின் பொறுப்பையும் கூட குறைத்து விடுகின்றது (மாற். 16:15, 16ஐக் கவனிக்கவும்; 1 கொரி. 9:16 ஐயும் கவனிக்கவும்), மற்றும் (3) ஆதியிலிருந்து தேவன் மனிதனுடனே தொடர்பு கொள்ள நிலைநாட்டிய தொடர்பு சாதனமான வசனங்களுக்கு முரண்பட்டதாய் இருக்கின்றது (யோவா. 6:44, 45). புறம்பே உள்ள பாவியின்மேல் பரிசுத்த ஆவியானவர் நேரடிக் கிரியை செய்கின்றார் என்ற உபதேசம் உண்மையானதென்றால், தேவன் தமது சொந்த திட்டமான "தேவன் - கிறிஸ்து - பரிசுத்த ஆவியானவர் - அப்போஸ்தலர் - ஏவப்பட்ட வசனம் - மனிதகுலம் முழுமையும்" என்ற திட்டத்தை மாற்றுப் பாதையில் செலுத்துபவராயல்லவா இருப்பார்!*

## கிறிஸ்தவருக்குப் பரிசுத்த ஆவியானவர் செய்வதென்ன?

*கிறிஸ்தவரல்லாதவருக்குச் செய்யாத ஒன்றைப் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்குச் செய்கின்றார் என்று நான் நம்புகின்றேன் (எபே. 1:12, 13). தேவனுடைய விசுவாசமுள்ள*

*பிள்ளைகளுக்கு அவர் தம் கிரியைகளைத் துடிப்புடன் செயல் படுத்த முடியும், செய்கிறார்.*

*நாம் (தண்ணீர் ஞானஸ்நானத்தில்) கிறிஸ்தவர்களாகும் போது, பரிசுத்த ஆவியானவரை வரமாகப் பெறுகின்றோம் (அப். 2:38; 5:32; கலா. 4:6). இது ஆவியானவரின் வல்லமையினு டைய அற்புதமற்ற ஒரு வெளிப்படுத்துதலாகும், இது புதிய ஏற் பாட்டில் ஆவியானவர் வாசம் செய்தல் என்று குறிப்பிடப் படுகின்றது (ரோமர் 8:9, 11; 1 கொரி. 3:16; 6:19; 2 தீமோ. 1:14). தேவன் நமக்கு உதவி செய்து நம்மைப் பெலப்படுத்த அவரது ஆவியை நமக்குக் கொடுக்கின்றார்.*

*சில உரிமைகோரல்கள் தெளிவாய் இருக்கின்றன: (1) எவரொருவரும் தமது உணர்வுகளினால், பரிசுத்த ஆவியானவர் தமக்குள் வாசம் பண்ணுவதை அறிய முடியாது. உணர்வுகள் வஞ்சிக்கக் கூடியவைகள்; உணர்வுகள் நேரத்துக்கு நேரம் மாறக் கூடுபவைகள். மேலும் பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆவியாக இருப்பதால் ஐம்புலன்களின் மூலம் அவரைப் பகுத்துணர முடியாது. மாறாக, நாம் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளாயிருந்தால், நமக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகின்றார் என்று நாம் அறிகின்றோம், ஏனென்றால் வேதாகமம் அப்படிதான் கூறுகின்றது. இதை நாம் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்கின்றோம் (கலா. 3:14). (2) நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் மூலம் வருகின்ற ஆசீர்வாதங்களை நமது வேதாகமப் படிப்பு மற்றும் வசனத்திற்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றிலிருந்து பிரிக்க முடியாது.*

*நமது வாழ்வைப் பரிசுத்த ஆவியானவர் ஆசீர்வதிக்க வேண்டுமென்றால், அவர் நமக்குள் வாசம் பண்ணுதல் பற்றி நாம் அவசியமாய் அதிக ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றில்லாதிருப்பது நமக்குக் கிடைத்த நற்பேறாகும். பரிசுத்த ஆவியானவரின் வசனத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் நாம் அவருக்கு ஒத்துழைக்கும் வரைக்கும் அவர் நம்மைப் பெலப்படுத்தி நமக்கு உதவி செய்ய முடியும். ஆயினும், அவர் நமக்காகச் செய்வதாகக் கூறப்பட்டுள்ள சிலவற்றை அறிவது ஆறுதலுள்ள ஒரு விஷயமாய் இருக்கின்றது. கிறிஸ்தவர்களா யிருக்கையில் ஆவியானவர் நமக்குச் செய்கின்றவைகளைப் பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு இங்கே தரப்படுகின்றது:*

(1) நமது வாழ்வில் அவரது பிரசன்னமானது நாம் தேவனுடைய புத்திரர்கள் என்பதற்கு ஆதாரமாய் இருக்கின்றது (கலா. 4:6; 1 யோவா. 3:24; 4:13). (2) அவர் பரலோகத்திற்கான நமது அச்சாரமாய் இருக்கின்றார் (எபே. 1:13, 14). (3) நாம் கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தவும், ஜெபம் செய்யவும் அவர் உதவி செய்கின்றார், நமது உயிர்த்தெழுதலில் அவர் பங்குள்ளவரா யிருப்பார் (ரோமர் 8:2, 11, 13, 26, 27 முதலியவை).

சுருக்கமாய்க் கூறினால், நமது வாழ்க்கையில் "ஆவியின் கனியை" உண்டாக்குவதே நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் பங்கேற்பாய் இருக்கின்றது (கலா. 5:22, 23).

> அன்பானவர்களே, கிறிஸ்துவின் சௌந்தரியம், மகிமை மற்றும் ஆளுமைத்தன்மை ஆகியவற்றை மனிதர்களுக்குள் மறுபடியும் உண்டாக்குவதே நமக்குள் வாசம் பண்ணும் ஆவியானவரின் நிறைவான நோக்கமாகும். பரலோகத்தின் மலர்கள் பூமியிலே வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் மொட்டுக்கள் யாவும் பரலோகத்திலிருந்தே இறக்குமதி செய்யப்பட வேண்டும்.[1]

ஆராதனையில் எவ்வளவு அதிகமாய்ச் சத்தமிட முடியும் என்பதில் அல்ல, ஆனால் கிறிஸ்துவைப் போன்ற வாழ்வு வாழ்வதிலேயே ஒரு கிறிஸ்தவர் தாம் ஆவியினால் நிறைந்துள்ளதைக் காண்பிக்க முடியும்!

## முடிவுரை

பிதா மற்றும் குமாரன் ஆகியவர்களைப் போலவே, பரிசுத்த ஆவியானவரும் உங்களின் இரட்சிப்பு பற்றி மிகவும் அக்கறை யுள்ளவராயிருக்கின்றார் (வெளி. 22:17). ஆவியானவருக்கு எதிர்த்து நிற்காதீர்கள், ஆனால் வேதாகமத்தில் அவர் கூறுகின்றபடி செய்யுங்கள். நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தால், பரிசுத்த ஆவியானவர் வசனத்தின் மூலம் அதை உணர்த்தட்டும். நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருந்தால், வசனத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் ஆவியானவருடன் ஒத்துழையுங்கள். அப்பொழுது அவர் உங்கள் வாழ்வை ஆசீர்வதிக்க முடியும்!

---

குறிப்பு

[1]George W. Bailey, Lecture presented at Central Christian College, Bartlesville, Okla., n.d.

# பரிசுத்த ஆவியானவரின் மூன்று வெளிப்பாடுகள்

| | பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் | அப்போஸ்தலர்கள் கைகளை வைத்தல் | பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுதல் |
|---|---|---|---|
| யார்? | தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர்: அப்போஸ்தலர்கள், கொர்நேலியு | சில கிறிஸ்தவர்கள் | எல்லாக் கிறிஸ்தவர்களும் |
| எவ்விதம்? | தேவனிடத்திலிருந்து நேரடியாகப் பெற்றார்கள் | அப்போஸ்தலர்களின் கைகளின் மூலம் பெற்றார்கள் | தண்ணீருக்குள் முழுகுதல் ஞானஸ்நானத்தின் மூலம் பெறுகின்றார்கள் |
| என்ன? | அற்புத வல்லமை | வரையறைக்குட்பட்ட அற்புத வல்லமை | அற்புத விதமாக அல்ல, ஆனால் அருளிரக்கத்தினால் |
| ஏன்? | செயல்படுவதற்கு சைகை கொடுக்க (மற்றும் தகுதிப் படுத்த) | புதிய ஏற்பாடு நிறைவடையும் வரை, “இடைவெளியை நிரப்புவதற்கு” | கிறிஸ்தவர்களுக்கு உதவி, அவர்களைப் பலப்படுத்த |
| எவ்வளவு காலம்? | தற்காலிகமானது: அப்போஸ்தலர்கள் உயிரோடு இருக்குமளவும். | தற்காலிகமானது: பெற்றுக் கொண்டவர்கள் உயிரோடு இருக்குமளவும். | கிறிஸ்துவின் யுகம் முழுவதற்கும் - இன்றைக்கும். |

## கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவரின் கிரியை

1. *அவர் நம்மைப் பாவம் மற்றும் மரணத்தின் பிரமாணத்திலிருந்து விடுவிக்கின்றார் (ரோமர் 8:2-8).*
2. *அவர் நம்மை உயிர்ப்பிக்கச் செய்வார் (ரோமர் 8:11).*
3. *அவர் நமது ஜெபங்களில் உதவி செய்து, நமக்காக வேண்டுதல் செய்கின்றார் (ரோமர் 8:26, 27; எபே. 6:18).*
4. *அவர் நம்மை வழி நடத்துகின்றார் (ரோமர் 8:14).*
5. *அவர் நம்மை நமது மீட்பின் நாளுக்கென்று முத்திரை போடுகின்றார் (2 கொரி. 1:22; எபே. 1:13, 14; 4:30).*
6. *அவர் நம்முடன் ஐக்கியமாய் இருக்கின்றார் (2 கொரி. 13:14).*
7. *அவர் நமக்கு பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைத் தருகின்றார் (எபே. 2:18).*
8. *அவர் நமது உள்ளான மனுஷனைப் பெலப்படுத்துகின்றார் (எபே. 3:16).*
9. *அவர் நமக்கு ஒருமைப்பாட்டைத் தருகின்றார் (எபே. 4:3).*
10. *அவர் நம்மைப் பரிசுத்தமாக்குகின்றார் (2 தெச. 2:13).*

Adapted from Owen Olbricht, *The Holy Spirit*